ஓலை 75 | ஓசை 198 | ஜூன் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்

## பொருள்

அறத்தை நல்லதென்று போற்றும்
நெஞ்சம் இல்லாத தன்மை,
ஒருவன் மற்றவனைப்பற்றிப் புறங்கூறுகின்ற
சிறுமையால் காணப்படும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# ஹைக்கூ

குயில் ஓசை குக்கூ
ஜப்பான் கவிதை ஹைக்கூ
காட்சியைச் சொல்லும் கவிதை
வாசித்தால் கிடைக்கும் உவகை

ஹைக்கூ கவிஞர் பாஷோ
கவிக்கோ எழுதினார் லேசா
தொட்டுக் காட்டியவர் பாரதி
தொடங்கி வைத்தவர் அமுதபாரதி

மூன்றடி இந்தத் துளிப்பா
முயன்றி எழுதினால் அப்பப்பா
ஹைக்கூவும் சென்ரியும் ஒன்றல்ல
ஒன்றாய்ப் பார்ப்பது நன்றல்ல

லிமரைக்கூ ஹைபுன் ரெங்கா
எழுதுவான் ஹைக்கூ கவிஞன்
முயன்றிடுவோம் இவைகள் எழுத
ஹைக்கூ உலகம் மேலும் உயர

கவிஞர் சே.ா. ஸ்ரீதரன், இலங்கை

# குறுங்கவிதைகள்



வலியைச் சொல்ல
வார்த்தை தேவையில்லை.
போதும் ஒருதுளி கண்ணீர்.
/
முகத்தைத் தழுவிக் கன்னத்தில்
முத்தமிட்டு நாசியில் நுழைந்த
காற்றில் பூவாசம்.
/
பேசிக் கொண்டிருக்கிறேன்
பேசாத வார்த்தைகள்
மௌனத்தில்.
/
ஒற்றைத் தீபத்தை
விளக்காய் கொண்ட குடிசையில்
ஈசல்களின் சிறகுகளை
மெத்தையாய் கொண்டுறங்கும்
பிள்ளைகள்.
/
கடலை விட்டுப் பிரிந்து வர
எத்தனிக்கும் ஆறுகளே
அலைகள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

(பதினேழு -இரண்டாம் பகுதி)

## 16. ஆதிரை பிச்சை இட்ட காதை

நாகர் தலைவன் தனியே வந்திருக்கும் ஆதிரை கணவனைக் கண்டான்
"ஆக, இவனுடைய இளமை உடல் இன்று நமக்கு ருசியான விருந்தாகும்.
சாகப் போகிறோம்,'' அதிர்ந்த சாதுவன் குருமகனிடம் அறம் பேசினான்
தேகத்தை புடைத்து நர மாமிசம் உண்பது உலகத்தில் மகா பாவமாகும்

பசிதீர உண்பது பாவம் என்றால் நாங்கள் எப்படி உயிர்வாழ்வது பூமியில்
ருசித்து உண்ண எங்களுக்கு கள்ளும் புலாலும் தவிர என்ன இருக்கிறது
ருசித்து உண்ணும் அற்புதமானது நர மாமிசமே, நீயே வந்து விட்டாய்
"விசித்திரமாக இருக்கிறது நீங்கள் கூறுவது காய் கனி பயிர் இல்லையா?"

"கள்ளையும் புலாலையும் புசிக்காமல் பின் எப்படி உயிர் வாழ்வது?"
"உள்ளதைச் சொல்கிறேன் உடல் வேறு உயிர் வேறு புரிகிறதா ?
கேள் , உடலை விட்டுச் செல்லும் உயிர் வேறு உடலில் ஜனனமாகிறது
தெளிவாக புரிந்துகொள் வினைப்பயனுக்கு தக உடலில் புகும"

''தர்ம வழியில் நடப்பதே உலகில் உயிர் வாழ்தலின் கடமையாகும்
அதர்ம வழியில் நடப்பவர்கள் கொடுமையான நரகம் சேர்வார்கள்
இதுவே உண்மை. அறிந்த பெரியோர் அவற்றை நீக்கினர் உணர்க,
அதனால் பிறப்பும் இறப்பும் உறங்கலும் விழித்தலும் போன்றது .''



அவர்கள் பேசும் நாகர் மொழி நன்கு அறிந்தவன் சாதுவன்
எவருக்கும் இருக்கும் தாய் மொழி பற்று நாகர்களுக்கும் உண்டு
இவர்களுக்கு சாதுவனிடம் அன்பும் மரியாதையும் ஏற்பட்டது
அவர் மொழியில் அவன் பேச மனம் மாறினர் அறவழி ஏற்றனர்

"சாதுவ! இது சத்தியம் இனி நல்லவை தவிர அல்லவை செய்யோம்
பாதுகாப்போம் மரக்கலம் உடைந்து உயிர் தப்பி வருபவர்களை
சாதுவானார்கள் நாகர்கள் நிறைந்த பொற்குவியல்கள் கொடுத்தாரக்ள்
சாதுவனை சந்திரதத்தன் கப்பலில் பத்திரமாக அவன் நகர் அனுப்பினர்

இத்தகைய சிறப்புடைய ஆதிரை கையால் பிச்சை பெறுவாயாக
சத்திய வாக்காக காயசண்டிகை கூற ஆதிரை வாசலில் நின்றாள
பிச்சைப் புகுக என்றாள் மணிமேகலை அது கேட்டு வந்த ஆதிரை
உத்தமி ஆதிரை '' பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறு'' என்றாள்

தொடரும் ...

கவிஞர் ந. திருக்காமு

# பொறுப்பு

அன்பைத் தந்து
ஆசை காட்டி

இன்னல் நீக்கி
இன்ப மூட்டி

கன்னல் பேச்சில்
கட்டி வைக்கும்

அன்னையைப் பேணல்
நல்லவர் பொறுப்பு!



தூய்மை பேணி
துவ்வி வாழ்ந்து

தன்னலம் விடுத்து
தீரனா யிருக்க

துன்னெறி நடவாது
துன்னல ரகற்றி

ஆக்கம் ஈட்டி
அள்ளித் தந்து

ஊக்கம் தன்னை
உற்றார்க்குச் சொல்லி

துன்பம் தன்னைத்
துள்ளச் செய்து

பெற்றோரைப் பேணி
பண்புடன் நடந்து

நாட்டோரைக் காத்தல்
நன்மகன் பொறுப்பே!

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூரணை

# நூலகம்

அறிவை பெருக்கும் இடம் நூலகம்
ஆர்வமாய் படிக்கும் கருத்து பெட்டகம்
இனிக்க இனிக்க படிக்க தூண்டும்
ஈடில்லா மகிழ்வை தந்து மகிழும்
உலகத்தை கைக்குள் பார்க்கும் இடம்
ஊரார் போற்றி புகழும் உன்னதம்
எளியோரும் கற்று இன்பம் பெறுவர்
ஏழு தேசமும் சொல்லி தரும்
ஐவரும் போற்றி எழுதியது உண்டு
ஒளிமயமான எதிர்காலம் நமக்கு இருக்க
ஓடிஓடி தேடி சுகமானது நூலகம்
ஔவையும் இங்கு தான் கற்றாளோ



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

நூறாண்டுக்கால வாழ்க்கைப்பயணம்
நொடியில் முற்றுப்புள்ளி வைத்த
வேள்புலக் கூளியர் படை.



புல்லும் செடியும்
புனலும் மரமும்
குரல் கேட்டு வளர்ந்தது.
தடம் பதித்த பாதம்
ஒத்தடம் தேடி.

விடியல் தந்த பொழுதுகள்
விடை சொல்லாமல் செல்ல.
இறுக்கம் தளர்த்திட வழியில்லை.
ஆற்றுப்படுத்த யாருமில்லை.

கண்ணீரில் நனைந்து காலத்தை
கடத்தும் வெளியேற்றப்பட்டவர்கள்.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# பலப் பிரயோகம்

யாரையும் அடிக்கும் உரிமை
யாருக்கும் கிடையாது.
எதிர்ப்பு தெரிவிக்கும் முறையும்
அடிப்பது கிடையாது.
மனதாலும், கருத்தாலும்

பிடிக்காத நபராக இருந்தாலும்
சக மனிதனை அடிக்கும் உரிமை
ஒருநாளும் தனி மனிதனுக்கு இல்லை.
வலியவரையோ, எளியவரையோ
பலத்தால் எதிர்கொண்டால்
ஆணவம்,
அதிகார திமிர்,
இன்னபிற.

என்றே சொல்லிச் செல்கிறது உலகம்.
ஒருநாளும் வன்முறை
எப்போதும் எதற்கும்
தீர்வாவதில்லை.
பலம் பிரயோகித்தல்
தவறான செயல்தான்.



ஊருக்குத்தான் உபதேசம்
சும்மா இருடி?
சொன்னா கோபம் வருதா?

ரப்.. ரப்...ரப்...

கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

பிடி தளர்ந்த துளி வானம்
பெரு வானத்தோடு இணைகிறது
விழுங்கி நெளியும் குளம்

****

மிதந்து வந்து ஒதுங்கிய இலை
பெருமூச்சு விட்டபடி கரையேறுகிறது
காற்று!

****

பொம்மைகளுக்காக அழுத குழந்தை
பொம்மைகளுக்கு மத்தியில் அமர்ந்து
மீண்டும் அழுகிறது அம்மாவிற்காக!

****

நிலவையும நட்சத்திரங்களையும்
பார்த்தவர்கள் சொல்கிறார்கள்
வானத்தை பார்த்ததாக!

****

மலையிலிருந்து இறங்குகிறேன்
நட்சத்திரங்கள் மின்னுகின்றன
கீழும் வானம்!



கவிஞர் கி. கவியரசன், செங்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

# கதையிலும் நீதான் கண்ணாளனே

கண்ணுக்குள் நிக்கிறியே
கனவினெல்லாம் வருகிறாயே

நேரில் வந்துவிடு
நெஞ்சமதைத் தந்துவிடு

அருகினில் அமர்ந்திடு
ஆசையாய்ப் பேசிவிடு

எண்ணங்கள் சுழல்கிறதே
அனைத்திலும் நீதானே

கட்டழகு மேனியில்
வண்ணமாய் கலந்திடவா

சிறகடிக்கும் ஆசைகள்
நினைவுகளின் ஓசைகள்

அன்பானப் பாசக்காரா
கட்டிக்கொள் என்னையே

காதலும் வாழட்டுமே
கன்னியும் மகிழட்டுமே

புன்னகைப் புரிந்திடு
பூபாளம் இசைத்திடு



பூந்தென்றல் காற்றாய்
என்னைத் தழுவிடு

செவ்விதழ் முத்தத்தில்
சிவக்கட்டும் கன்னமே

மயிலிறவு நினைவுகள்
புத்தகத்தின் உள்ளேயே

உள்ளம் கவர்ந்தவனே
உரிமையுடன் ஆட்கொள்வாயே

நித்தமும் நினைக்கிறேன்
நினைவலைகளில் மிதக்கிறேன்

படிக்கும் கதைகளிலும்
நீ தான் கண்ணாளனே

கதவோரம் காத்திருக்கிறேன்
இருவிழிப் பூத்திருக்கிறேன்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# விரல்கள் மீட்டாத வீணை நீயடி!



அங்கயற்கண்ணியின் விழிகளுக்கு
அளந்து அடியெடுத்து
அழகு சொன்ன தேவதை நீயடி.
அழகின் மொத்தத்திற்கும்
அறுவடை பணிக்கும்
அன்பின் ஆர்வம் நீயடி.

இனம் கண்ட
இன்பத்தின் அருவியாம்
இமயமும் நீயடி.
இன்னல்கள் எல்லாம்
மின்னல்களாக பறந்திடச்
செய்யும் இயந்திரன் நீயடி.

உலகின் ஒளியாம்
ஆதவனையே ஆடச்செய்யும்
உதயவானின் ஒளி நீயடி
ஒளிந்து மறைந்தே
ஓரங்கட்டும் பால் நிலா நீயடி.

என்விரல்கள் மீட்டாத வீணை நீயடி.
ஏக்கங்களை தாலாடாக
வீசிச்செல்லும் காரிகை நீயடி.

ஆவணியாய்
அணிகலன்களாய் அணிந்தவள் நீயடி
ஆசை காட்டி அலைக்களிக்கும்
விண்ணின் வானவில் நீயடி.

விரல்களின் தொடல்களில்
விரகதாபத்தை பற்ற வைத்தவள் நீய
தொட்டால் சிவக்கும்
கன்னங்கள் சுமந்தவள் நீயடி.

ஒதுங்கி நின்று வேடிக்கை காட்டும்
ஒட்டவிடாத மங்கை நீயடி.
விரல்கள் மீட்டப்போகும்
விண்ணவன் காத்திருக்கிறேன்
வாயேன் நீயடி.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# சுடச்சுட

கொட்டும் மழையை பார்த்தபடி
கையில் ஆவி பறக்க, ஏலம் இஞ்சி
மணம் கமழ ரசித்து ருசித்து
சுடச்சுட அருந்தும் தேநீர்!
அரசியலோ, திரைப்படமோ
விறுவிறுப்பான செய்திகளை
மக்களின் கவனத்தை கவர
சுடச்சுட பரபரப்பாக
வெளியிடும் ஊடகங்கள்!
வம்பு வழக்குகள் மட்டுமின்றி
நியாய தருமம் தவறும்
அடுத்தவர் வாழ்க்கையும்,
வதந்திகளை சுடச்சுட பரிமாறும்
பத்திரிக்கை செய்திகளும் நம்மை
பரபரப்பாய் வைத்திடுமே!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# ஒட்டடைகூழ் மலர்வாழ்க்கை

பாலைவன பூமியில்
கோடைகால ஓட்டப்பந்தயம்
சரிசமமான வேகத்தில் முன்னேறும்
வெப்பம் ஈரப்பதம் அனல்காற்று



அரையுயிர் நெருஞ்சிச்செடியில்
பொலிவிழந்த பூக்கள்
முதிர்ந்து போன காய்கள்

காவுவாங்கும் கடன்
உயிர்க்கூட்டை விடுத்து
அயல்நாட்டில் வேலை செய்யும்
ஒப்பந்த உழைப்புபறவை

சுருங்கிப் போன இரைபெட்டிக்குப்
பசியாற போதும் போதும்
ஒரு சேரநாட்டுப் பரோட்டா
ஒரு குவளை தேநீர்.

கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# குழந்தைத் தொழிலாளர்

நாளெல்லாம் உழைத்து
உடல் வலியென குடித்து
மிச்சம் இருக்கும் பணத்தில்தான்
மிச்சப்பட்டு இருக்கும்
எங்கள் பசியும்.

பாத்திரம் தேய்த்து தேய்த்து
தேய்ந்து போன கைகளில்
காணாமல் போயிருந்தன
தாயின் கைரேகைகள்

கற்று உயர ஆசைதான்
கால் வயிற்றை நிரப்பவே
காலனோடு போராட்டம் இங்கு!

பசிக்கிறது என கேட்கும்
பால்வாடி தம்பிகளின் முகம் கண்டு
வெறுமையாக இருக்கும்
சோற்றுப் பானை
தாயின் கண்ணீரால் நிரம்பி வழிய
வெம்பி நிற்கிறது என் மனம்!

பட்டினிக் கிடந்ததால் என்னவோ
உணவு விடுதி நோக்கியே
கால்கள் நடந்தன.

ஒருவேளை உணவுடன்
இருநூறு ரூபாய் வாங்கிய பிறகும்
உழைப்பும் தொடர்ந்தது
விடுதி முடியும் நேரத்தில்
விடையாய் கிடைத்தது
கூடுதலாக வந்த
இரண்டு பொட்டலங்களில்
எங்கள் பசியும் ஆறியது




தன்னை விட அதிகம் சுமக்கும்
எறும்பாய் தொடர்கிறேன்!

சிட்டுக் குருவித் தலையில்
பனங்காய் என்றாலும்
சிறகடித்தே பறக்கிறேன்!
வறுமையை அதில் மறக்கிறேன்.

கானல் நீராய் போனது கல்வி
ஏக்கமாய் பார்க்கிறேன்.
குடும்பம் சிறக்க
இன்னும் உழைக்கிறேன்
இருப்பினும் நான்
குழந்தைத் தொழிலாளன்!

கவிஞர் சி முத்துராசன், அரியலூர்

அன்புடையார்
இசைமழை பொழிந்து தீர்த்தாலும்
அன்பிலார் வசைமாரி கொட்டித் தீர்த்தாலும்
நிறைநீக்கி எவரும் குறையே சொன்னாலும்
அகிலமே உன்னை எதிர்த்து நின்றாலும்
கேளாச் செவிகளே வென்று நிற்கும்.
வீண்முயற்சி என்றாலும்,
விடாமுயற்சி என்றாலும்
விமர்சனங்கள் கேட்டு வருந்தாதே.
கற்றோர் உன்னை ஏளனம் செய்தாலும்
குற்றமே பாராட்டித் திரிந்து வந்தாலும்
சுற்றமெல்லாம் தூற்றி வந்தாலும்
உந்தன் பெயரை நிலைநாட்டிடு.



கவிஞர் ஶ்ரீ. ஜெயந்தி, சிதம்பரம்

# பகுத்தறிவும் பைந்தமிழும்

பைந்தமிழை இலக்கியம் கற்றால் பயன்பெறும் வாழ்வு
பகுத்தறிவை விதைத்திடும் சமூகத்திற்கு மில்லை தாழ்வு

நற்பண்பை நல்விதையாய் விதைத்திடும் தமிழ்
அறநெறி ஒழுக்கத்தையும் கற்பிக்கும் தமிழ்

மெய்மையும் பொய்மையும் உணர்த்திடும் தமிழ்
மெய்ஞானத்தையும் பண்பையும் புகட்டிடும் தமிழ்

உன்னையும் என்னையும் இணைத்தது தமிழ்
உண்மையை உலகிற்கு உரைத்திடும் தமிழ்

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது தமிழ்
வேர்போல் நின்று காத்திடும் தமிழ்

மனிதத்தை உலகிற்கு உரைத்தது தமிழ்
மாண்பை விதைத்து மலர்ந்தது தமிழ்

பகுத்தறிவை நமக் கூட்டி வளர்த்திடும் தமிழ்
பைந்தமிழால் அறநெறியை புகட்டிடும் தமிழ்

வீழ்த்த வந்த வடமொழியை விரட்டியது தமிழ்
வாழ்வு தந்து தமிழனை உயர்த்தியது தமிழ்

எக்காலமும் முக்காலமும் உயர்ந்தது தமிழ்
இக்காலம் ஆள்வதற்கு அறமே தமிழ்

பைந்தமிழில் பகுத்தறிவை கற்று நாம் உயர்ந்திடுவோம்
தமிழனாய் அறநெறியை கொண்டு உலகை வென்றிடுவோம்

வாழிய தமிழாய்! வளர்க தமிழனாய்!



கவிஞர் ஆதி. சுப. சரவணன், புதுச்சேரி

# வானம்



நகரங்களை கடந்த பிறகு,
அழகாக தெரிகிறது,
வானம்.

கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# கோவம் உண்டா?

என்னை போன்றே கோவம் உண்டா?
பெண்ணாய் கல்லிப் பாலில் தப்பித்து
பாலியல் வன்முறைக்கு பலி ஆகின்றோம்

கற்பையும் கருப்பையும் கொடுத்தன் காரணம்
பலத்தை யாரிடமும் காட்டிவிடக் கூடாதென்றா

பலவீனமாள் நீயே எனச் சுட்டிக்காட்டவா
எத்தனை பெயரோ பெண்ணுக்கு மட்டும்

பிறரை வசைபாடவும் பெண்ணின் உறுப்பு தான்
உன்னை பிரசவிக்கவும் பெண்ணின் உறுப்பு தான்

தாயுமாய் தாரமாய் தங்கையாய் தமக்கையாய்
சரியேது தவறேது நியாயமாய் வாதாட



கண் திறந்தால் எரித்து விடுவாள்
தராசை கொடுத்து ஏமாற்றி விட்டார்கள்

நீதியும் நீயே கதியும் நீயே
நிதி இல்லையேல் நீதியும் இங்கில்லை

தவறேதும் இல்லை சரியேதும் இல்லை
பெண்ணாய் இப்புவியில் பிறக்கா விட்டால்

கவிஞர் நறுவீகவி சி. பொன்னழகு தினேஷ்குமார், ஈரோடு

# தந்தை

தன்னை அழகு
படுத்தாமல் - தன்
பிள்ளைகளை அழகாக
வாழ வைக்கும்
தன்னிகரில்லா
தந்தையே!

அன்று

ஊரார் ஒரு சொல்
சொல்லி விடக்கூடாது
என்று உன் அணிகலன்களை
அடகு வைத்து எங்களுக்கு
ஒளிப்படம் காண்பித்தாய்.

மின்விளக்கு
இல்லாத போதிலும் - நீ
மெழுகுவர்த்தியாய்
உருகினாய்.

பிள்ளைகளின் படிப்பிற்காக
பெட்ரோல் மெஸ்
விளக்கு ஏற்றி வைத்து
காத்திருந்தாய்

வாரந்தோறும்
சலவை காராக
மாறி எங்கள்
சீருடைகளையும்
எங்களையும்
சுத்தம் செய்தாய்.

இப்படி நீ பட்ட
கஷ்டங்களையும்,அனுபவித்த
வேதனைகளையும்,
விட்டுக் கொடுத்த
தியாகங்களையும்,
மீட்டிப் பார்த்தால்
தீட்டப்பட்ட கவிதை
நீண்ட சரித்திரம் ஆகிவிடும்

அன்று உங்களை
குறை சொன்ன ஊர் - இன்று
உங்கள் வளர்ப்பினை
பெருமை பேசும் போது!

உங்கள் மனம்
"நான் ஒரு நல்ல
அப்பா தான்" - என்று
கூறுமே அதைத் தவிர வேறு
கிரீடம் என்னால் - தர
இயலாது இந்த ஜென்மத்தில்!



கவிஞர் திருமதி மோகன், நாவலப்பிட்டி, இலங்கை

எளிதாக கிட்டவில்லை
ஏணி வைத்தும் எட்டவில்லை
அடுப்படி போதும் என்றார்கள்
அடங்கி நட என்றார்கள்

அழகு நீ என்றார்கள்
மஞ்சத்தில் துஞ்சு என்றார்கள்
தெய்வம் என்றார்கள்! தேவதை என்றார்கள்
தேவை முடிந்ததும் அடிமை நீ என்றார்கள்

கல்வி வேண்டாம்! கலவி போதும் என்றார்கள்
வேதம் எல்லாம் மறை என்றார்கள்
பெண்ணிடம் இருந்து மறை என்றார்கள்
கற்றால் தீட்டு என்றார்கள்

புத்தியை தீட்டினால் கத்தியை தீட்டினார்கள்
புத்தகப் பையை எடுத்தால் தோட்டாவால் துளைத்தார்கள்
கல்லடி! சொல்லடி! சாணத்தால் அபிஷேகம்!



சும்மா கிடைத்து விடவில்லை
தங்க தட்டில் வைத்து நீட்டவில்லை
ஆயிரம் அடக்குமுறைகள்
ஆயிரம் பலிகள்

சொல்லொண்ணா துயரம்
சோர்வூட்டும் நெடும் பயணம்
அடக்குமுறை இன்னும் ஓயவில்லை
பல நாடுகளில் கல்வி கற்க உரிமையில்லை

கல்வியை படிகளாக்கு
வெற்றியை பாதையாக்கு
பதவியை அலங்கரி
பார் ஆளு! போர்க்கோலம் பூணு

உதவாதினி தாமதம்
உண்மையான விடுதலை கல்வி
தொடுக்க வேண்டும் கேள்வி
நடத்த வேண்டும் வேள்வி

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# அனுபவங்கள்



தவழும் குழந்தையாய் தடுமாறும் பொழுதில்
உலகம் அறிய உய்த்தவை புண்கள்
கல்வியின் பாதையில் சுற்றம் உணர
கால்கடுக்க நடந்தும் கடுமழையில் நனைந்தும்
வார்த்தைகளின் வழியே வாழ்வில் நுழைகையில்
ஏச்சும் பேச்சுமாய் இல்லாது சொல்லியே
காலை இடரிவிட கூடும் கூட்டம்
எரிமலை கனலெனவே எழுந்து நிற்கையிலே
வேலையின் குடையில் இளைப்பாற நிற்கையில்
பணிச்சுமையை ஏற்றிவிட்டு பரிகசிக்கும் சிலகூட்டம்

இளமையின் எல்லையில் இல்லறத்தில் அடிவைக்க
உறவுகளைப் பேணுதற்கு தனிப்பாடம் தேவையாக
பெற்றிடும் ஊதியத்தில் குடும்பத்தை பேணிடவே
கற்றிட்ட கல்வியும் கற்றுத்தராத அனுபவத்தில்
கரணங்கள் போடும் கழைக்கூத்தாடி போலே
பள்ளமும் மேடுமென இல்லறம் பறக்கையிலே
வாலிபத்தின் சுவைக்கெனவே வாரிசுகள் பிறக்கையிலே
கால்கட்டும் கைகட்டுமென நாளெல்லாம் உருண்டோட
விடியும் பொழுதுகளில் கிடைத்திடும் தெளிவுகளில்
விரியும் எழுத்துகளின் கவிதைகளில் ஒளிந்தபடி
அனுபவங்கள் ஆசைகளில் நடத்திச் செல்கின்றன
அழகிய வாழ்வின் வற்றா நதியை.

*கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்*

# சுவையுணர்வு

சுபநிகழ்வு வீட்டிலும் சுவைக்காகவே
சுற்றி வளைத்துண்ணும் நாமும்
சுழற்றி அடித்துடும் சுழற்சிவயிறுமே!

சுலபவேலை உணவும் சுவைமிகுதியே
சுட்டு சமைத்தவுடன் பட்டென விழுங்கிடவே
சுவையிலும் சப்பு கொட்டி உண்டிடலாம்
சுகம் தாராதே உடலுக்குமே!

சுகாதாரத்துடன் சுவையுமே சுலபமாக வீட்டிற்குள்ளே
சுகந்த மணத்தோடு சுற்றி அலைந்து
சுவைக்காக உல்லாச உணவகம் போய்
சுவீகாரமாய் உடலுக்கு நோய் வாங்கியே!

சுத்தமான நிறமுள்ளவைகள் சுவையாக இராதே
சுவையான அனைத்திலும் சத்தானது கிடையாதே
சுவைக்கு அடிமையானால் சுரமும் வந்திடுமே
சுரச மருந்துமே கசப்பு சுவையோடே!



சுவாசத்தோடு வாழவே சுவைத்தலையும்
சுளித்தலோடு தள்ளிவைப்போம்,
சுவையே சுபிட்சமானால்
சுளுக்கு விழுந்திடும் வயிற்றிலுமே,
சுகவீனமாகாமல் இருக்க சுவீகாரமாய்
சுவையுணர்வும் சுப அழைப்பாய்!

*கவிஞர் நீலாசுபாஷ், ஆக்ஸ்பர்*

# அப்பா



உயிரால் உறவாகி
உயிரை உருக்கி
உழைத்த செம்மல்

ஊரோடு உறவாடி
உலகில் எமை
அறிமுகப்படுத்தியவர்

வீட்டில் விளக்கெரிய
வியர்வை சிந்தியவர்
விடியலின் முன்னே
விழித்தெழுந்தவர்

நடுநிசி நின்று தொழுது
இறையோடு பேசியவர்
இறக்கும்போதும்
இருகரமேந்திப் பிரார்த்தித்தவர்

அடுப்பு எரிந்திட
அன்னைக்குத் தோள் கொடுத்தவர்
அன்போடு அரவணைத்தவர்

உறவுகள் வாழ்ந்திட
உதவிக்கரம் நீட்டியவர்
உரிமை காப்பதில் உன்னதமானவர்

கற்றுயர்ந்தோரை
கௌரவப் படுத்தியவர்
கருணையில் தாயெனின்
கடமையில் தானென்றானவர்

கலந்துரையாடித்
தீர்மானமெடுப்பவர்
ஆடம்பரமில்லாதவர்
அனைத்திலும் தூய்மை பேணுபவர்

வழி தவறுகையில்
வழிகாட்டித் திருத்துபவர்
வறுமையிலும் தளராதவர்

உள்ளத்தில் அன்பைப் புதைத்து
உயர்வுகளின் போது
உச்சி குளிர்ந்தவர்

தன் கனவுகள் நனவாகையில்
உலகைவிட்டே மறைந்தவர்
வாரிசுகளுக்கும் வழிகாட்டி
வானில் உயர்ந்தவர்

ஒற்றுமைக் கயிற்றைப்
பற்றிப் பிடிக்க
கனிவோடு கைகோர்த்தவர்

அசலின் நிழலாய்
அகத்தின் நினைவுகளில்
இன்றும் இறவாதவர்

நம் அப்பா

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷீ

# செல்லமகன்

செல்லமகனே கொள்ளையழகாய் நீயும் என்னை இம்சிக்கிறாய்
கள்ளத்தனம் சூடி சேட்டைகள் செய்கிறாய்
தேவைத்தீர பல முத்தம் கன்னம் சேர்க்கிறாய்
சொல்லத்தெரியாததை செய்கையால் சொல்லி வைக்கிறாய்
ஏதோன்றை செய்து விட்டு கடவாய் கிழிய சிரிக்கிறாய்
ஆசையாய் முத்தம் கேட்டால் அடம்பிடிப்பாய் மறுக்கிறாய்.

சாதம் என்றது கால்தெரிக்க ஓடி ஒழிகிறாய்
கேக் என்றதுமே கேளாமலே அடம்பிடித்து கேட்கிறாய்



கடினமென்ற சொல்லை
அழகாக சொல்லி அசரவைத்து விடுகிறாய்
தண்ணீரை வார்த்தையால் கேட்காதிருக்கிறாய்

சமையலறையில் தோசையூற்ற அடம் கொள்கிறாய்
ரொட்டி தட்ட சண்டை செய்கிறாய்
கொத்து போடுவதாக பிங்கான்களை
தட்டி கலவரத்தை உண்டு பண்ணுகிறாய்

ஆடைத் தைக்கும் போது
கள்ளப்பூனையாகி மிதித்து வைக்கிறாய்

அச்சு யென்று நான் உன்னை ஆசையாக அழைத்தால்
பொம்மைக்கு பெயர் சூடி அழைக்கிறாய்

மழலை மழையில் நனைகிறேனே தினமே
அத்தனை மகிழ்ச்சியாக இருப்பேன்

கவிஞர் சஹீனாஸ் பேகம், இலங்கை

# கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயம்

கள்ளகபடமற்ற கல்லிடைக்குறிச்சி மக்களின்
உயிர் கள்ளச்சாரயத்தில் போகிறது!
அச்சோ துயரம் அரசு மெத்தனம் காட்டுகிறது!
விஷச்சாரயத்தை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதை விட்டு
வேடிக்கை பார்க்கிறது அரசாங்கம்!
விலைகளை கொடுக்கிறது அரசாங்கம்!
விலைமதிப்பற்ற உயிருக்கு விலையை கொடுத்தால் போதுமா!
விஷச்சாரயத்தை ஒழிக்க உங்களின்
நடவடிக்கைகள் என்ன என்று கேட்கிறோம்!
உங்களின் மௌனமே பதிலா!
இதில் அதிகாரிகளை மாற்றிடலாம்!
ஆனால் அட்டூழியங்களை தடுக்க
உங்களின் நடவடிக்கைகள் என்ன?
அரசாங்கமே பூரண மதுவிலக்கு எப்போது இந்த நாட்டில்?
மது தானே உனது கருவூலத்தை நிரப்புகிறது!
நீ எப்படி தடை செய்வாய் மதுவை!
இன்று ஐம்பது உயிர்கள்
நாளை எத்தனை ஆயிரம் உயிர்கள்?
தாலிக்கு தங்கம் வழங்கிவிட்டு
தாலியை மதுவினால் அறுக்கிறாயே?
உனக்கு மனசாட்சி இருக்கிறதா?
மெத்தனால் கலக்கபட்டதாம்
எல்லாத்தையும் மேன்மை மிகு பார்வையால்
மெத்தனத்தோடு பார்த்து கொண்டு தானே இருந்தாய் நீ?
தென்னாற்காடு மாவட்டத்தில்
இப்படி ஒரு துயர சம்பவமா?
மாண்பை இழந்த நீ ஆட்சியில் இருக்க அருகதை இல்லை!
உடனடியாக பூரண மதுவிலக்கை அமல்படுத்து!
இல்லையேல்
மந்திரிசபையை கலைத்து விடு?



கவிஞர் தினேஷ் கண்ணா, வழுதாவூர்

# விசித்திரமான பிரிவு

அழுதோ
சோகமாகவோ
பிறரிடம் புலம்பியோ
உன் பிரிவினை நான் காட்டிக்கொள்ள
ஒருபோதும் முயற்சிக்கவில்லை.

என் அனுமதி பெறாமல்
உன் நினைவு
உழன்று செல்வதை
நிறுத்தவும் எத்தனிக்கவில்லை.

என்ன விசித்திரமான
மனநிலை இது.



கவிஞர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

அகர முதல

# மறுப்பு

இல்லாததை நம்ப மறுத்தவர்கள்
இல்லாதவனையும் நம்ப மறுத்தார்கள்
சக உயிர்களை நேசிப்பதால்.

புலனாகாத எதையும் நம்ப மறுத்தவர்கள்
புலனாகாத அறிவை, உயிரை, மனதை,
காற்றை இருக்கு என்று நம்பினார்கள்.



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

அன்றைய தாமதம்
பல வினாக்களை
அள்ளிக்கொண்டு வந்தது
மற்றவர் என்பதாலோ

இன்றைய தாமதம்
இட்டபணி இடாத பணி
என்ற காரணங்களில்
தொற்றிக் கொள்கிறது
தன் நிலை குறையாதிருக்கவோ



வாசிக்காத வரிகள் போன்று
வசப்படாத சூழல்களில்
விழுந்தெழாது தவிக்கும்
பொருள் கேட்டுவிடக் கூடாதென்று!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# அவளுக்கு நிகரேது

சுமையாக நினைக்கவில்லை
என்றும் அவள்
அம்மா என்ற சொல்லிலே
எத்தனை தியாகமென்று
நீயும் உணரவில்லை



அள்ளிக் கொஞ்சிய போது
வெள்ளந்தி சிரிப்பை சிந்திய
உன்னை இன்று எங்கோ தேடுகிறாள்

வயது ஏறினாலும்
உன் பிள்ளைகள் வந்தும்
எங்ஙனம் உணராது போனாய்

உண்டாயா என கேட்பாயோயென
அதோ அவளின் ஏக்கப்பார்வையை
அறியமறுக்கும் நீ
எதை சாதித்தாலும் படிகள் தோறும்
தாயின் முகம் தோன்றாது
போனால் நீ தோற்றுவிட்டாய்

தாயை மதிக்காத பிள்ளைகள்
உயர உயர போனாலும்
நிம்மதி கிட்டாதென உணராத
உள்ளங்களே

உணரும் போது உன்னருகில்
காற்றுமட்டும் உரசி
கணத்து அழுத்தம் மனிதமே

நொறுக்கித் தள்ளினாலும்
துடைத்து துடைத்து
கண்ணீர் மறைக்கும் தாயின்
மனதை அறிய மறுக்கும் மனங்களே

சாபங்கள் விடமாட்டாள்
ஆனால் அவளின் மனதின்
அரற்றலும் வலியும் நம்மைத்
துரத்துமென்பது உண்மையே

நொறுக்கி தூளாக்கிய
நெஞ்சம் விம்மி விம்மி கரையும்
நித்தமும் அவளுக்கு நிகரேது உலகில்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி, நாகை மாவட்டம்

நிலம்

தாயாய் நம்மைத் தாங்கிடும் மடியே!
சேயாய்ச் சிரிக்கும் செந்தூரத் திருவே!
அணியாய் விளங்கும் ஆறுகள் மேனியிலே!
அவளின்றி வாழுமோ அவனியில் உயிர்களே!

இசையும் இன்பமும்

இசையால் உள்ளத்தில் உவப்பு கூடிடும்!
இசையால் உதிரத்தில் உரமும் ஏறிடும்!
இசைக்கும் மனதுக்கும் நெருக்கம் அதிகம்!
இசையே மருந்தாகும்! இதயத்தை வருடும்!



இசையுடன் இருந்தால் இன்பம் பிறக்கும்!
இசைபட வாழ்ந்தால் இல்லம் சிறக்கும்!
காலம் இசைந்தால் காரியம் முடியும்!
ஞாலமும் இசையு(வு)டன் நம்மை ஏத்தும்!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# தோள் கொடுக்கும் நட்பு

அன்பு நட்பு என்றுமே தோள் கொடுத்து நிற்குமே
எதிர்பார்ப்பு இல்லா உண்மை உறவு உலகிலே நட்பு என்பது மட்டுமே.
கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார்  நட்பு பார்க்காத நட்பு.
அதியமான்  அவ்வையாரின் தமிழ் வளர்த்த நட்பு.
ராஜாஜி பெரியார் கொள்கை தாண்டிய நட்பு.
உலகமே எதிர்த்தாலும் துவளாத
மனம் படைத்து தோள் கொடுக்கும் நட்பு .
நட்பை போல ஒரு உறவு உலகில் வேறு இல்லையே!
எதிர்பார்ப்பு ஏமாற்றம் எதுவும் இல்லை நட்புக்கு.
நாடு மொழி இனமெல்லாம் நட்புக்கு இல்லையே.
அன்பு நட்பு என்றுமே தோள் கொடுத்து நிற்குமே.
யோசித்து வாழ ஆயிரம் உறவு நேசித்து வாழ நட்பான உறவு.
மனம் விட்டு பேச ஒரு உறவு அதுவே
இன்னொரு   தாய் மடி யான உறவு.
தடம் மாறும் போதும் தடுமாறும் போதும்
தாங்கி பிடிக்கும் நல்ல புனிதமான நட்பு.
நண்பர்கள் என்பது உறவு அல்ல உயிரின் உணர்வுகள்.
அன்பு நட்பு என்றுமே தோள் கொடுத்து நிற்குமே!



கவிஞர் ஜேபி @பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# காதல் பறவைகள்

பிறப்பிலே ஆணையும் பெண்ணையும்
பிரித்து வைத்த இறைவன்தான்
இறப்பிலும் இருவரையும் பிரித்தான்
இடையிலே ஏனிந்த ஏமாற்றம்.

அன்பெனும் மனவெழுச்சி உணர்வு
அனைத்து உயிர்க்கும் சமமாகும்
ஆனாலும் இவைகூட இன்று
மனிதனுக்கு மட்டும் வேறாகும்.



அன்னையும் பிதாவும் முன்னறி
தெய்வம் என்று சொல்லியே
தெய்வத்தை ஒதுக்குவது போலே
பெற்றோரை துறப்பது எதனாலே.

பெற்ற பிள்ளைகள் அடையும்
பெருமைகளைக் கண்டே நாளும்
பேருவுவகை கொள்ளும் பெற்றோர்கள்
நிறைந்த நாடே நம்நாடு.

காதலென்ற பெயரால் பெற்றோருடன்
மோதல்தனைக் கொண்டே நாளும்
புல்லின பறவைகள் போலே
பறந்து செல்வது ஏனோ.

தாயின் தன்னிகரில்லாப் பாசத்தையும்
தந்தையின் தடையில்லா நேசத்தையும்
உடன்பிறந் தோரின் உன்னதமான
பரிதவிப்பையும் இழந்து செல்வதேனோ.

*கவிஞர் கவி. செங்குட்டுவன், ஊத்தங்கரை*

# பொறுமை

விட்டுக் கொடுப்பதும்
பணிந்து போவதும்
அர்த்தமற்றது
அதனை
புரிந்து கொள்ளாதவர்
முன்னிலையில்.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# நினைவுகள்

காலையில் உண்ட பழங்கஞ்சி
காலை நேர வேலைகள்

கருப்பட்டி கலந்த காப்பி
கனிவுடன் கவனித்த தாத்தா பாட்டி

பொட்டுக்கடலையுடன் உண்ட சீனி
பொறுப்பாய் நடந்த பிள்ளைகள்



கடிக்க முடியாத கம்மர்கட்டு
கண்ணயர அன்னை மடி

காசில்லை என்று கலங்கும் போது
காக்கா கடி போட்ட மிட்டாய்

அடித்துத் தின்ற மாங்காய்
அழகாய் கற்றுத் தரும் ஆசான்கள்

வேகவைத்த கிழங்குகள்
வேகம் குறையா வீம்புகள்

பச்சையாய் உண்ட காய்கறிகள்
பணிவு தந்த பக்குவங்கள்

ஆலமரத்தடி பஞ்சாயத்து
ஆலோசனை கூறும் பெரியோர்கள்

இரவு நேர நிலாச்சோறு
இன்னிசை ஞானமாய் பிள்ளைகள்

வெற்றிலை போடும் விருந்துகள்
வெள்ளந்தியான மாந்தர்கள்

பதநீர் நுங்கு அதிகமுங்க
பக்குவமா பாசமும் கிடைக்குமுங்க

இன்றைய சில இடங்களில் மறந்ததுங்க
இன்றும் ஓரிரு பக்கம் இருக்குதுங்க

இதெல்லாம் இருந்ததான்னு ஆச்சரியப் படுறவங்களே
இப்படியும் வாழ்க்கை ஒரு காலத்தில் இருந்ததுங்க

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நாம் செய்த பிழையே

வீட்டிற்கு வந்தவளை
விளக்கோற்ற வைப்பதுவும்.
விளக்கேற்றி வைத்தவளை
வீதிக்கு துரத்துவதும்.
வீதிக்கு துரத்தியவள்
விடுதிகளில் ஒதுங்குவதும்.
விடுதியில் ஒதுங்கியவள்
விலைமகளாய் போவதுவும்.
விதியினால் வந்ததல்ல
நாம் செய்யும்
பிழையினால் நேர்ந்தவையே.



கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு இலங்கை

இரவின்
விளிம்புகள்
முளைக்கத்
தொடங்குகின்றன,
பகல்களின்
சிறிய பறவைகள்
தயாராகின்றன
பெரிய வானத்திற்கு.



கோவில்
படிக்கட்டுகளின்
எண்ணிக்கையை
தாண்டும்
எண்ணப்
படிக்கட்டுகளின்
தூய்மை மட்டுமே
பாவ புண்ணிய
கணக்குகளின்
தீர்வு சொல்கின்றது.

மங்கலாகவும்
சிறியதாகவும்
தெரியும்
தூரத்து மரம்
அருகாமையில்
ஆலமரமாகின்றது.

செல்லும் பாதையில்
கல்லோ முள்ளோ
குத்தா விட்டாலும்
அப்புறப்படுத்தும்
கைகளை மட்டுமே
இதயக் கண்கள்
பார்க்கின்றன.

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# கந்தல் கோணி எந்தன் உடையாச்சு!



கையில் கிட்டியதைக் கொண்டு கவலையின்றி
நகைத்த முகத்துடன் நானிருக்கேன் மகிழ்வுடனே!
ஆள்பாதி ஆடைபாதி எனக்கும் பொருந்திடுமே!
கோட்டு, சூட்டு உடையில் கையில் சூட்கேசு
கால்களில் பூட்சுடன் என்னைப் பார்த்து
என்ன சொல்ல நினைக்கின்றாய்? வறுமையும்
செழுமையும் நிரந்தரமில்லை இவ்வுலக வாழ்வினிலே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரீ, புதுச்சேரி

# சிறுகதை



காலை கதிரவன் கண் சிமிட்டி, பூமாதேவியின் மீது படர்ந்து உலகெங்கும் ஒளிபரப்ப தொடங்கினான். புள்ளினம் ஒலியெழுப்பி சிறகடிக்க, பனித்துளியோடு, பூக்களும் தஞ்சாவூர் பொம்மைகள் தலையாட்டிட, சில்லிடும் காற்றும் ரீமாவின் ஜன்னல் சீலைகளை ஆங்காங்கே பறக்க செய்து கொண்டிருந்தது. கடிகார அலாரமும் சரியாக ஆறு மணி என்பதை சேவல் போல கூவிக் கொண்டிருக்க, அடிக்கும் அலாரத்தை நிறுத்தி எழுந்து நாலடி கூந்தலை சுருட்டி கொண்டையிட்டு பறக்கும் ஜன்னல் திரைசீலைகளை கட்டி விட்டபடி ஜன்னலின் ஊடாக வெளியே பார்த்த வண்ணம் கடந்த நாட்களை நோக்கி சென்றாள் உள்ளத் திரையிலே.

பட்டாம்பூச்சியாய் ஆசிரியர் பயிற்சி நெறியை முடித்த பின் கடமைக்காக காத்திருந்தாள் ரீமா. சிறுவயதிலேயே தந்தையை இழந்தவள் என்றாலும் ஒழுக்கத்திலும், நற்குணத்திலும் நற்பேருப்பெற்றவள்.

ரீமா பஸ்திருப்பிடத்திலே தோழியின் வருகைக்காக காத்திருந்தாள் அப்போது கருப்பு நிற உயர் ரக காரில் "ஹாய் ரீமா எங்க போக போறீங்க" என்று வசீகர குரலில் இம்ரான். பேரழகன் இல்லையென்றாலும் மாநிற பணக்கார பையன். ஊரின் பெரும்புள்ளியில் ஒன்று. பணத்தைப் போலவே குணத்திற்கும் இவனிடம் பஞ்சம் இல்லை. "ஷிபா வரும் வரை காத்திருக்கிறேன் இம்ரான்". என்று கூறி முடிக்கும் போதே ஷிபாவும் அதே நேரம் வந்து சேர்கிறாள். இம்ரானும் ஷிபாவும் எதிரெதிர் வீடு என்பதாலும் சிறு வயது முதல் ஒன்றாய் விளையாடி, படித்து, ஒரே தட்டில் உண்டு ஒரு தாய் பிள்ளைகள் போல பழகுவதாலும், "இம்ரான் நானா வீட்டில் பெண் பார்க்கும் படலம் ஆரம்பிச்சுட்டாங்க போல பெரியம்மா சொல்லிட்டு போனாங்க" என்று குறும்பாக கதைத்தாள். "ஓஷிபா உம்மாட கரைச்சல் தாங்க ஏலா என்னைய கட்டி கொடுத்து துபாய் ஆபீஸ் பொறுப்பையும் என்ட தலையில கட்டி வைக்கும் வரைக்கும் ஓயாது போல" என்று புன்னகையோடு கூறிக்கொண்டே "எங்க போறீங்க ரெண்டு பேரும் நான் வேணும்னா கூட்டிட்டு போய் விடவா" என்ற வாரே வண்டி சாவியை ஒரு திருகு திருகினான். "இல்ல இம்ரான் நாங்க பஸ்ல போறோம் இன்னும் கொஞ்சம் செயல் நூல் புத்தகங்கள் வாங்க இருக்கு வாங்கினதும் வீட்டுக்கு போறது தான் உங்களுக்கு எதுக்கு சிரமம் கேட்டதற்கு மிக்க நன்றி" என்று கையசைத்து விடை கூறினாள்.

ஷியாஸ்னிரா பைஸல், இலங்கை

## சிறுகதை

" சரி கவனமா போய் வாங்க" என்று கையசைத்து கருப்பு குதிரை மின்னல் வேகத்தில் பறந்து மறைந்தது, வாங்க வேண்டிய புத்தகங்களை வாங்கி மார்போடு அணைத்துக் கொண்டு தோழிகள் இருவரும் பஸ்ஸில் ஏறி அமர்ந்தனர்.



ஷிபா, " ரீமா ரீமா" என்று ஏதோ சொல்ல வாரதும் விழுங்குவதுமாய் இருக்க, "என்னடி பக்கத்துல தானே இருக்கேன் என்ன என்ற பெயரை ஏலம் விட்றியா? "என்று கிண்டல் அடித்தவாறு கேட்டால் ரீமா. "இல்லடி ரீமா எனக்கு என்னமோ நீ கூடிய சீக்கிரத்துல கல்யாணம் பண்ணி போவேன்னு தோணுது" என்று புன்னகைத்தால் "என்னது" என்றவாறு கண்களை அகல விரித்து ஷிபாவை பார்க்க, "இல்லடி கதீஜா பெரியம்மா அதுதான், இம்ரான் நானாட உம்மா உன்ன கண்ணு வச்சுட்டா உன்ன பெண் கேக்குறதா எங்கட உம்மா கிட்ட பேசிட்டு இருந்தது என்ட காதுல காலையில விழுந்துச்சு அதை போன்ல சொல்லலாம் என்று தான் நினைச்சேன் இந்த மாதிரி நல்ல விஷயத்தை எப்படி போன்ல சொல்றது அதுதான் உன்ன கண்டதும் சொல்லலாம்" என்று இழுத்தால் ஷிபா.

"ஷிபா உனக்கு நல்லா தெரியும் எங்கட வீட்டு நிலைமை வாப்பாட மரணத்துக்கு பிறகு உம்மா இளம் விதவையா இருந்தப்ப ஊரே மறுமணம் செஞ்சுக்க சொல்லியும் செஞ்சிக்காம எனக்காக வாழ்ந்தவங்க. என்னைய படிக்க வைக்க எவ்வளவோ பாடுபட்டு இருப்பாங்க நான் சம்பாதிச்சி அவங்கள பாத்துக்கணும் என்று நினைக்கிறப்போ வியாதி வந்திருச்சுடி" என்று கண்கலங்குகிறாள் ரீமா. "இப்பல்லாம் அவங்களுக்கும் ஒரே இந்த கல்யாண பேச்சு தான். உம்மாக்கு இந்த புற்றுநோய் வந்ததிலிருந்து அவர்களுடைய யோசினையே என்னைய கரசேக்கிறது பற்றி தாண்டி அவங்க யாரை கை காட்டுறாங்களோ அவங்கள தான் நிச்சயம் நான் கழுத்த நீட்டுவேன் அத்தோட கல்யாணத்துக்கு பிறகும் என்ற உம்மாவ என்னோட வெச்சு ராணி மாதிரி பார்த்துப்பேன்" என்று கதைத்துக் கொண்டிருக்கும் போதே இறங்குமிடம் வந்ததை உணர்ந்து நாளை சந்திப்போம் எனக் கூறி பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டை வந்தடைகிறாள்.

ஷியாஸ்னீர் பைஸல், இலங்கை

# தொப்புள் கொடி உறவு

## சிறுகதை

"போன காரியம் எல்லாம் நல்லபடியா முடிஞ்சுதா" என்று கட்டிலோடு இருக்கும் தாய் ஆமினா ரிமாவிடம் கேட்கிறாள். "ம்ம்" என்று தலையசைக்கிறாள். ரிமாவை அருகில் அமர்த்தி தலையை தடவி மகள் உங்ககிட்ட ஒன்று பேச வேண்டி இருக்கு என்கிறாள் ஆமினா. "என்னம்மா என்ன விஷயம்" என்று தாயோடு கட்டிலிலே கைகோர்த்து கேட்க "இவ்வளவு காலமா உன்ன படிக்க வச்சு உனக்குனு ஒரு தொழிலும் கிடைக்கிறப்போ சந்தோஷம் அதோட நான் கண்ண மூடுறதுக்கு முன்னாடி உனக்கு ஒரு கல்யாணத்தை செய்து கண்குளிர பாத்துறனும் ரீமா எத்தனையோ. பேர் வீடு தேடி வந்து உன்ன கேட்டப்ப நல்ல வருனுக்காக உசுர கையில பிடிச்சுட்டு இருந்தேன். நல்ல இடத்தில இந்த ராணியை கண்கலங்காம மகளை மாதிரி பாத்துக்குற ஒரு வரனுக்காகத்தான் இறைவன் அருளால கதீஜாவும் அன்வர் காக்காவும் வீடு தேடி வந்து பெண் கேட்டப்ப எப்படி நான் மறுப்பு சொல்றது" என்றதும், " நீங்க என்னம்மா சொன்னீங்க" என்றால் ரீமா. "என்ன மீறி நீ எதுவும் சொல்ல மாட்ட என்ற நம்பிக்கையில் சரி கண்டேன். உனக்கு இம்ரான தெரியும் தானே ?" என்று ரீமாவின் முகத்தைப் பார்த்து கேட்கிறாள்.

இம்ரான் என்றதும் ரீமாவின் இதயத்தில் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் பறந்தாலும், அவளால் தாயைப் பிரிந்து, தாயை தனியே இந்நிலையில் விட்டுவிட்டு திருமணம் செய்து போக அவள் மனம் இடம் கொடுக்கவில்லை." உம்மா இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு இதை பத்தி பேசுவோமேமா" என்கிறாள். கொஞ்சம் குரலில். "நல்ல பையன் நல்ல குடும்பம் நல்ல விஷயத்தை ஏமா தள்ளி போடணும்?" என்னும் போது "சரிமா" என்று தலையசைக்கிறாள்.

இரவு படுக்கையில் புரண்டுi கொண்டிருக்கும்போது ரேமாவின் தொலைபேசி முணுமுணுத்தது யார் இது என்ற எண்ணோட்டத்தில் "ஹலோ" என்றதும் மறுமுனையில் "ரீமா நான் இம்ரான் உங்களோட கொஞ்சம் பேசணும் இயலுமா நீங்க இப்ப பிஸியா நான் பிறகு எடுக்கவா" என்றுகேட்க "இல்ல சொல்லுங்க" என்றவாறு ரீமா அவன் பேசுவதை கேட்க ஆர்வமாய் இருந்தாள்.

"ரீமா எனக்கு உங்கள நல்லா தெரியும் உங்களோட உம்மாக்கு சுகம் இல்லாமல் கட்டிலோட இருக்கிறதும், நீங்கதான் ஒத்த பிள்ளையா அவங்களை பாத்துக்குறதும் எனக்கு நல்லா தெரியும். எங்கட உம்மாக்கு உங்களைத்தான் எனக்கு கட்டி வைக்கணும்னு ரொம்ப ஆசை. உங்களோட மனநிலை தெரியாம உங்களோட உம்மா கூட போய் பேசியும் இருக்கிறாங்க. உங்களுக்கு என்னைய நிக்கா பண்ண விருப்பம் இருந்தா தைரியமா சொல்லுங்க நான் எல்லாத்தையும் பார்த்துக் கொள்றேன்" என்று தைரியமாய் பேசும்போது, மறுமுனையில் ரீமா

ஷியாஸ்னா பைஸல், இலங்கை

## சிறுகதை

அவன் கூறிய வார்த்தைகள் யாவும் ரீமாவின் காதுகளில் தேனாய் பாய்ந்தது. அவளும் திருமணத்திற்கு பச்சைக்கொடி காட்டினாள்.

இரு வீட்டாரின் வாழ்த்துக்களோடு சடங்கு சம்பிரதாயம் கொண்டு கல்யாணம் இனிதே நிறைவு பெற்றது. மனக்கோலத்தில் மகளைக் கண்ட தாய் ஆமினா பல கோடி தடவை இறைவனைப் புகழ்ந்திருப்பாள். அவ்வளவு மகிழ்ச்சி ,ஆனந்தக் கண்ணீர் தாரைதாரையாக வழிந்த வண்ணமே இருந்தது.

இரவு நித்திரைக்கு செல்லும் போது ரீமாவை முத்தமிட்டு விட்டு நெஞ்சில் லேசாக வலிப்பதாக கூறியவள் தான் காலையில் மூச்சடக்கிக் கொண்டாள். ரீமாவிற்கோ அவளது உலகமே இருண்டு விட்டது போன்ற உணர்வு. பித்து பிடித்தது போல சில நாட்களாக இருந்தால் கல்யாண வீட்டிற்கு மரண வீட்டிற்கு என்று வந்த சொந்த பந்தங்கள் எல்லாம் ஓய்ந்து போனபோது ரீமா கணவன் இம்ரானிடம் "இம்ரான் என்னால உம்மாட பிரிவு தாங்க இயலாம இருக்கு, எங்க பார்த்தாலும் அவங்களோட முகமும் குரலுமாகவே தோணுது கூடிய சீக்கிரம் நாங்க துபாய் போக ஏற்பாடு செய்யுங்க "என்று கெஞ்சும் தொனியில் மழலை முகம் வாடிய பூவாய் இம்ரானிடம் கேட்க ஏற்கனவே விமான டிக்கெட் பதிவு செய்துவிட்டு நாளை காலை 10 மணிக்கு விமானம் என்பதை கூறிவிட்டு விமான டிக்கட்டை தொலைபேசியில் காட்டி "இப்ப தூங்குமா" என்று கூறி அவளை உறங்க வைக்கிறான். அவளுக்கோ தூக்கம் தூரமாகவே இருக்க இரவு முழுவதும் புரண்டு புரண்டு தாயின் ஏக்கமாகவே நீள்கிறது. பொழுதும் புலரவே அவள் யன்னினூட வெளியே பார்த்து சிந்தனையில் ஆழ்ந்து இருக்க, "ரீமா" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்க்கிறாள். இம்ரான் கையில் தேநீரோடு நெற்றியில் முத்தமிட்டு "எதுக்குமா சும்மா யோசிச்சிட்டு இனி உனக்கு நான் இருக்கிறேன்" என்று கூறி தைரியமூட்டுகிறான். "டீய குடிச்சிட்டு ரெடி ஆவுங்க பிளைட்டுக்கு போக டைம் சரி" என்று கூறிவிட்டு காரை தயார் செய்ய ரீமாவும் வீடு முழுவதும் ஒரு வலம் வருகிறாள் சிறு வயது முதல் தாயோடு ஒட்டி நிற்கும் வாசல் கதவு, சிறு வீடு என்றாலும் இருவரின் சிரிப்பு சத்தம் வீடே நிறைந்த தருணம், ஒன்றாய் அமர்ந்து சாப்பிடும் சமையலறையும் நோய் முற்றிய போது படுக்கையோடு இருந்த கட்டில் எல்லாம் பார்த்துவிட்டு நீ இல்லாத இந்த வீட்டில என்னாலையும் இருக்க முடியாது என்ற எண்ணத்தோடு வீட்டை விட்டு விடைபெறுகிறாள்.

காரும் புறப்பட்டு விமான நிலையத்தை நோக்கி பறக்கிறது. உலகில் உதித்த எந்த ஒரு ஆத்மாவும் மரணம் என்னும் பானத்தை சுவைத்தே தீர வேண்டும்.

முற்றும்

ஷியாஸ்னீரா பைஸல், இலங்கை

## கட்டுரை

19-ஆம் நூற்றாண்டில் ''பெரும்புலவர்'' என்று புலவர்களால் புகழப்பெற்றவர் "வித்வத் சிகாமணி' சிந்நயச் செட்டியார். இவர் தேவகோட்டையில் "மேலவீடு' எனப்படும் செல்வக் குடும்பத்தில், மாற்றூர்க்கோயில் - உறையூர் பிரிவில், 1855-ஆம் ஆண்டு இலக்குமணன் செட்டியார்-லெட்சுமி ஆச்சிக்கு நான்காம் பிள்ளையாகப் பிறந்தார். பிறந்த தேதியும் மாதமும் அறியக் கிடைக்கவில்லை.



சிந்நயச் செட்டியார் ஓர் ஆசுகவி (ஆசுகவி எனப்படுவோர் கொடுத்த பொருளில் அடுத்த பொழுதில் கவிதையாகப் பாடக்கூடிய திறமை படைத்த புலவர்). இவரது குரு, தேவகோட்டை "வன்றொண்டர்' நாராயணன் செட்டியார். இந்த வன்றொண்டர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர். சிந்நயச் செட்டியாரின் மானசீக குரு யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர். "சிலேடைப் புலி' பிச்சுவையர், காரைக்குடி சிவபூசகர் சொக்கலிங்கம், இராமநாதபுரம் ரா.ராகவையங்கார் ஆகியோர் சிந்நயச் செட்டியாரின் மாணவர்கள்.

இவருடைய உருவத் தோற்றம் யாரையும் ஈர்க்கக் கூடியது. நல்ல சிவப்பு நிறம், விபூதி, ருத்ராட்சம் அணிந்து பஞ்சகச்ச மேலாடையில் சிவப்பழமாய்க் காட்சி அளிப்பார். கையில் எப்பொழுதும் ஓலைச்சுவடி இருக்கும். ரத்தினக் கம்பளத்தில் வீற்றிருப்பார்.

எழுதியுள்ள நூல்கள்:

- மதுரை மீனாட்சி அம்மைப்பதிகம்
- நகரத்தார் வரலாறு
- திருவொற்றியூர்ப் புராணம்
- குன்றக்குடி மயின்மலைப் பிள்ளைத் தமிழ்
- தேவகோட்டை சிலம்பைப் பதிற்றுப்பத்து அந்தாதி
- இராமேசுரம் தேவைத் திரிபு அந்தாதி
- திருவண்ணாமலை அருணைச் சிலேடை வெண்பா
- காசி யமக அந்தாதி
- வெளிமுத்திப் புராணம்
- கும்பாபிஷேக மகிமை
- ஐம்பெரும் காப்பிய ஒப்பீடு
- கண்டனூர் மீனாட்சி அம்மை பாடல் - முதலியன.

அ வில்சன், இதழாசிரியர்

## கட்டுரை

சிந்நயச் செட்டியாரின் மனைவி பெயர் மீனாட்சி. இவர்களுக்குப் பிள்ளை இல்லாததால், இருவரும் காசிக்குச் சென்று ஓராண்டு பிள்ளைவரம் வேண்டி, தினந்தோறும் கங்கையில் நீராடி, காசி விசுவநாதரைத் தொழுது வந்தனர். குழந்தை பிறக்க வேண்டி ஒரு வாழை மரக்கன்று நட்டனர். அது வளர்ந்து, குலைதள்ளியபொழுது இவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குக் "காசி' என்று பெயரிட்டனர். பின்னாளில் தேவகோட்டைக்குத் திரும்பி, தமிழ்ப் பணியிலும், ஆன்மிகப் பணியிலும் ஈடுபட்டார். குழந்தை காசி, மூன்றாண்டுகளுக்குப் பின் காலமானது விதி வசமே!



மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, உ.வே.சாமிநாதய்யர் போன்றோர் இவரைப் பாராட்டியுள்ளனர். "வன்றொண்டர்' நாராயணன் செட்டியார், ""தன் மாணவர்களில் ஆசுகவி பாடக்கூடியவர் சிந்நயச் செட்டியார் ஒருவரே'' என்று தன்னிடம் கூறியதாக உ.வே.சா., தமது சரித்திரத்தில் கூறியிருக்கிறார்.

இவருடைய சாதனைகளில் மேலும் இரண்டு உள்ளன. அவை: திருவாமாத்தூர் வண்ணச்சரபம் ஸ்ரீதண்டபாணி சுவாமிகளை தேவகோட்டைக்கு அழைத்து வந்து, தேவகோட்டைச் சிவன் கோயிலில் உள்ள ஸ்ரீதண்டபாணி பேரில் பிள்ளைத்தமிழ் பாடச்செய்தார். வேலங்குடிக் கல்வெட்டில் இருந்து நகரத்தார் வரலாற்றை முதலில் எழுதி வெளியிட்டார்.

சிந்நயச் செட்டியார் 1900-ஆம் ஆண்டு காலமானார். இவர் இறந்த மாதமும் தேதியும் கூட அறியக்கிடைக்கவில்லை என்பது பெரும் குறையே! என்றாலும் இவர் ஆற்றிய தமிழ்த்தொண்டின் புகழ் என்றென்றும் குறையாது.

நன்றி : https://www.dinamani.com/
https://mutiru-tamilpani.blogspot.com/

அ வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

## நம்மை உடைத்த நாள்களே

## நம்மை உருவாக்கிய நாள்கள்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே　　　　முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு　அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு　சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa　www.aagaramuthala.com　aagaramuthala@gmail.com